# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 349/ந/2025. நாள் 06.07.2026

| | | |
|---|---|---|
| S.அன்பழகன்,<br>துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| 1)நகராட்சி ஆணையர்,<br>துறையூர் நகராட்சி, துறையூர்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | எதிர்மனுதாரர்கள் |
| 2)உரிமையாளர், ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ்,<br>துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | | |

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 06.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.10.2025 அன்று பெறப்பட்டு 349/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 06.10.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“வணக்கம். துறையூர் திருச்சி சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் மற்றும் கோகுலம் சில்க்ஸ் அமைந்துள்ள கட்டிடம் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் 1 அங்குலம் கூட விடாமல் (set back) 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள சின்ன ஏரியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதோ என்றும் நினைக்க தோன்றுகிறது. எனவே விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 07.08.2025–இல் புகார் அனுப்பி அதனை அவர் 13.08.2025இல் பெற்றுக்கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை நகராட்சி நிர்வாக இயக்குனர், மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே Tamil Nadu Combined Development and Building Rules, 2019–ன்படி கட்டிட வரைபடத்தில் parking area and set back area குறிப்பிட்டுதான் அனுமதி நகராட்சியால் வழங்க முடியும் என்கிற சூழ்நிலையில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடம் நகராட்சியிடம் பார்க்கிங், செட் பேக் வசதியின்றி எப்படி கட்டிட அனுமதி பெற்றது என்று எனக்கு வியப்பாக உள்ளதாகவும், ஒரு வேலை நகராட்சியிடம் அனுமதி பெறாமல் செயல்பட்டு வருகின்றதா என்ற எனது சந்தேகத்தை தெரிவித்திருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காமல் விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் ஆணையர்கள் இருந்ததிலிருந்து லஞ்சம் பெற்றிருப்பார்களோ என்கிற எனது சந்தேகத்தை தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் கிளி பிள்ளைக்கு சொல்வது போல் திரும்ப திரும்ப முறையான அனுமதியின்றி கட்டிய கட்டிடங்களை இடிப்பது தான் சட்டம் என்றும் அதை செயல்படுத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதையும் சுட்டிகாட்டி இருந்தேன். மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் வரிவிதிப்பு முறையை சரியாக கடைப்பிடித்தாலே விதிமீறல்களை தடுத்து விடலாம் என்று கூறியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் ADGP கைது வழக்கில் சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் என்று அனைத்து அரசு பொது ஊழியர்களும் உணரும் வகையில் இந்த ADGP கைது செய்தி சென்றடைய வேண்டும் என்று கூறியதையும் பொதுமக்களின் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத I.A.S. அலுவலருக்கு ஒரு மாதம் சிறை தண்டனையும், அபராதமும் விதித்துள்ள உயர்நீதிமன்றத்தின் உத்தரவையும் சுட்டி காட்டியதோடு, அதிகாரிகள் அரசியல் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவுரை வழங்கியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்ச நீதிமன்ற உத்தரவு எண்.12199–12200/2025 நாள் 30.04.2025) Roc.எண்.3555/2025/TP 3, நாள் 15.05.2025 கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குனர் அனுப்பிய கடிதத்தை பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மேற்கண்ட விஷயங்களை நன்கு அறிந்தும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற உத்தரவுகளை அறிந்தும், துறையூரில் 100க்கு 90 சதவீத கட்டிடங்கள் விதிமீறி கட்டி உள்ள நிலையில் உச்சநீதிமன்ற உத்தரவின்கீழ் அனைத்து விதிமீறல் கட்டிடங்களையும் அகற்றுவது ஆணையரின் கடமை என்பதை சுட்டி காட்டியதோடு விதிமீறல் கட்டிடங்களை கண்டுபிடிப்பது ஆணையருக்கு சிரமம் என்று கருதினால் அவர் கேட்டுகொண்டால் அனைத்து விதிமீறல் கட்டிடங்களின் பட்டியலை அளித்து உதவி புரிய தயாராக உள்ளதாக குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் என் புகாரிலேயே ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் அறிவுரையை பின்பற்றாவிட்டாலும் எனக்கு கவலையில்லை என்றும், அவரின் உயர் அதிகாரிகளை ஏமாற்றுவது போல் மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டையும் ஏமாற்றிவிடலாம் என்று கருதாமல் மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டையும் விட தன்னை சர்வ வல்லமை படைத்தவராக கருதும்போக்கை மாற்றிகொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டியும், மேலும் தலைமை செயலாளரின் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் என் புகார் மீது நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை எனக்கு அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்வதாக கூறி இருந்தேன்.

எனவே நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே தலைமை செயலாளரின் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும் இதுவரை விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்தே விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது.

எனவே இத்தகைய மோசமான, அசாதாரண சூழ்நிலையில் குற்றவாளியும், நீதிபதியும் எப்படி ஒருவராக இருக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் நிர்வாகிக்கு சாதகமாக கொடுப்பதோடு, எப்படியும் உறுதியாக விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை காப்பாற்றி விடுவார் என்று நான் கருதுவதால், மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று நியாயமான நீதி வழங்கும் தாங்கள் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் Tamil Nadu Combined Development and Building Rules 2019ன்படி கட்டி உள்ளதா என்பதையும், கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு நகராட்சியால் கட்டிட நிறைவுச்சான்று வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுவதோடு, விதிமீறிய கட்டிடத்திற்கு ஆதரவாக செயல்பட்ட அனைத்து ஆணையர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.3894/2025/எப்1, நாள் 23.01.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"விசாரணையில் மேற்படி ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி நிறுவனம் சுமார் 6 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா 630 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற ஜுவல்லரி ஷாப் இயங்கி வருகிறது. இரண்டாம், மூன்றாம் தளத்தில் தலா 630 சதுரடி பரப்பளவில் RCC building அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது. நான்காம் தளத்தில் 40 சதுரடி கழிவறை, கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2560 சதுரடியாகும். தரைத்தளம், முதல் தளத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. மனுதாரரால் 2560 சதுரடிக்கு 600 சதுரடி வாகனம் நிறுத்துவதற்கு என்று இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1) ன் கீழ் ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் திரு.வெ.குணசீலன், துறையூர் நகராட்சி நாள் 09.01.2019ல் நகராட்சியில் அனுமதிபெற்று கட்டியுள்ளார். வரிவிதிப்பு எண்கள்.087/020/900885, 087/020/900886, 087/020/900883 மற்றும் 087/020/900884 ஆகிய நான்கு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர்

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2-ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 17.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.அன்பழகன் தனது 09.02.2026 நாளிட்ட கடிதத்தில் தனக்கு எதிர்வரும் 21.02.2026 அன்று தன் பிள்ளைகள் மூலம் 70வது திருமணம் (பீமரதசாந்தி) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், 349/ந/2025 விசாரணையை ஒரு மாதம் தள்ளி வைக்க கோரியதன் அடிப்படையில், அவரது கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, மேற்படி விசாரணை 24.03.2026 அன்று நடைபெறும் என இம்முறைமன்ற 11.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிட உரிமையாளர் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

6. மனுதாரர் திரு.S.அன்பழகன் 24.03.2026 விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் திருச்சி சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி கட்டிடம் விதி மீறி 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் 1 அங்குலம் கூட பார்க்கிங் வசதியின்றி கட்டப்பட்டுள்ளது.

சின்ன ஏரியை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக தோன்றுகிறது. விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 24.03.2026 நாளிட்ட எனது எழுத்துப்பூர்வ வாக்குமூலம் மற்றும் அறிக்கையினை கூடுதல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்''.

7. அதனைத்தொடர்ந்து மனுதாரர் தனது 24.03.2026 நாளிட்ட எழுத்துப்பூர்வ கூடுதல் வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் மற்றும் கோகுலம் சில்க்ஸ் உள்ள கட்டிடம் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் 1 அங்குலம் கூட விடாமலும் (set back) 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள சின்ன ஏரியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது.

எனவே விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்கீழ் இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்கத்தவறிய ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று நியாயமான நீதி வழங்கும் தாங்கள் துறையூரில் உள்ள ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை நேரடியாக இடநேராய்வு செய்து விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்கீழ் இடித்து அகற்றுமாறு பணிவுடன் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் துறையூர் நகராட்சி ஆணையர் விதிமீறிய ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளருக்கு உடந்தை என்று நான் கருதுவதால், அவர் குற்றத்தை அவரே விசாரிப்பது

இயற்கை நீதிக்கு புறம்பாக இருக்கும் என்று நான் கருதுவதாலும், மேலும் ஒரு விசாரணை அதிகாரி மீது குற்றச்சாட்டு ஏற்படும் சூழ்நிலையில் குற்றச்சாட்டுக்கு உள்ளான அந்த அதிகாரியே விசாரிப்பது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமாக அமைவதோடு, சட்டப்படி நீதி கிடைக்காது என்ற காரணத்தால் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் விசாரணை அதிகாரியை மாற்றியதுபோல மாண்புமிகு தாங்களும் தங்களின் நேரடிப்பார்வையில் விசாரிப்பதுதான் இயற்கை நீதிப்படி சரி என்று நான் கருதுகின்றேன்.

மேலும், சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No. 4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறியதற்கு இதுபோதுமான காரணம் இல்லை என்றும், அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்று முறை என்று சொல்லி தப்பிக்க முடியாது என்றும் அது எதிர்தரப்புடன் சேர்ந்து கூட்டுச்சதியாக கூட இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலென்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று 20.02.2026இல் உத்தரவு பிறப்பித்து உத்தரவின் நகல் தலைமைச்செயலாளருக்கு உயர்நீதிமன்றம் அனுப்பி உள்ளது.

ஏற்கனவே மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடைபெற்ற 8 வழக்குகளில் 7 வழக்கில் ஆவணம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர் அறிக்கை வாயிலாகவும், நகரமைப்பு ஆய்வாளர் ஆவணம் இல்லை என்று நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளதாலும், இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

8. மேலும் மனுதாரர் தனது 24.03.2026 நாளிட்ட அறிக்கையை விசாரணையின்போது இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்:-

"திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உள்ள கட்டிடம் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் 1 அங்குலம் கூட விடாமலும் (set back) 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள சின்ன ஏரியை ஆக்கிரமித்து விதிமீறி TNCDBR 2019 சட்டத்திற்கு விரோதமாக கட்டப்பட்டுள்ளது.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உள்ள கட்டிடம் TNCDBR 2019 சட்டத்திற்கு விரோதமாக பார்க்கிங் செட்பேக் வசதியின்றி எப்படி கட்டிட அனுமதி பெற்றது என்றும், ஒருவேளை நகராட்சி அனுமதியின்றி இயங்கி வருகின்றதோ என்றும் தெரிவித்ததோடு நகராட்சி நிர்வாக இயக்குனரின் அறிவுறுத்தல்படி இதுவரை ஆய்வு செய்யாமல் லஞ்சம் பெற்றுள்ளார்களோ என்ற எனது சந்தேகத்தையும் தெரிவித்திருந்தேன். விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது மாண்புமிகு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதையும் சுட்டிகாட்டி இருந்தேன். மேலும் சட்டத்தை மீறிய ADGPஐ உயர்நீதிமன்றம் கைது செய்ய நடவடிக்கை எடுத்ததையும், சுட்டிகாட்டியதோடு, கடமை தவறிய I.A.S. ஆபிசருக்கு 1 மாத சிறைத்தண்டனையுடன் அபராதம் விதித்த உயர்நீதிமன்ற நடவடிக்கையும் சுட்டிகாட்டி இருந்தேன். மேலும் ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் அறிவுரையை பின்பற்றாவிட்டாலும், அவரின் உயர் அதிகாரிகளை ஏமாற்றுவதுபோல் மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டையும் ஏமாற்றிவிடலாம் என்று கருதாமல் உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு தெரிவித்தும் இதுவரை ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தின் மீது ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அவரின் அறிக்கை, வாக்குமூலம் அனைத்தும் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிட நிர்வாகிக்கு சாதகமாக இருக்கும்.

எனவே, மதிப்புமிக்க தாங்கள் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடத்தை இட நேராய்வு செய்து TNCDBR 2019–ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு நகராட்சியால் கட்டிட நிறைவுச்சான்று வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யவும், ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 8 வழக்கில் நான் புகார் கொடுத்ததற்கு பின்புதான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட உரிமையாளர்களும் இந்த முறைமன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட உரிமையாளர்களுக்கு சாதகமாக பார்க்கிங் இடம் வாங்கி உள்ளதாக ஆணையரும் பொய்யாக கூறி உள்ளதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் வரைபடத்தில் இல்லாமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை முறைமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதி இருப்பதால் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 8 வழக்குகளில் 7 வழக்குகளின் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று தொடர்ந்து கூறி வருவதால் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குனருக்கு ரூ.50 லட்சம் உயர்நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளதையும், ஆவணம் தொலைந்து விட்டது என்று கூறிய வழக்கில் அதிகாரிகள் மீது விஜிலென்ஸ் துறை விசாரணைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் கவனத்தில் கொண்டு இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

எனவே மரியாதைக்குரிய தங்களது விசாரணையில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது தெரியவந்தால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள் 30.04.2025இன்படி இடித்து அகற்றுமாறும் நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எடுக்கும் நடவடிக்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.3893/எப்1/2025, நாள் 23.03.2026–ல் தான் துறையூர் நகராட்சியில் ஆணையராகவும், பெரம்பலூர் நகராட்சி ஆணையர்(கூ.பொ) ஆகவும் பணிபுரிந்து வருவதாலும், சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து வாக்குச்சாவடி தொடர்பாக ஆய்வு பணிகள் மேற்கொள்ள உள்ளதாலும் இரண்டு நகராட்சிகளிலும் வரிவசூல் தொய்வுநிலையில் உள்ளதால் அதனை ஆய்வுசெய்ய உள்ளதாலும், 24.03.2026 நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாதநிலை உள்ளதால் ஆணையருக்கு பதிலாக நகரமைப்பு ஆய்வாளரை அனுமதிக்க கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து துறையூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் 24.03.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார். அதில்:–

"மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் 10.12.2025 அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி கட்டிட உரிமையாளர் மேற்படி அறிவிப்புக்கு தனது 23.12.2025 நாளிட்ட கடிதத்தில் தங்களது கட்டிடம் கடந்த 7 வருடங்களாக இயங்கி வருகிறது என்றும், தரைதளம், முதல் தளம் அனுமதியுடன் கட்டப்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது தளத்திற்கு இன்னும் அனுமதி பெறப்படவில்லை. மேற்படி இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களும் குடோவுனாகவும், கழிவறை கட்டுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி கோகுலம் ஜுவல்லரி கட்டிடத்திற்கு Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக நிறுவன உரிமையாளர் தனது 19.02.2026 நாளிட்ட கடிதம் 28.02.2026 நகராட்சியில் பெறப்பட்டது. அதற்கான ஒப்புகை சீட்டு நகராட்சியால் பெறப்படவில்லை. மேற்கண்ட ஒப்புதல் சீட்டு பெறப்பட்டு விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும், அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

10. மேலும் துறையூர் நகராட்சி ஆணையர் தனது ந.க.எண்.3893/2025/எப்1, நாள் 18.03.2026–ல், தனது ந.க.எண். 3894/2025/எப்1, நாள்.23.01.2026ல் தெரிவித்துள்ள விவரத்தையே மீண்டும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையாக வழங்கியுள்ளார்.

11. 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளர் திரு.வெ.குணசீலன் தனது 20.03.2026 நாளிட்ட மின்னஞ்சலில் தவிர்க்கமுடியாக சில குடும்ப காரணங்களால் 24.03.2026 அன்று விசாரணைக்கு ஆஜராக வேண்டிய தேதியில் எங்களால் ஆஜராக இயலாமல் உள்ளது என தெரிவித்து மேற்படி தேதிக்கு பதிலாக வேறு தேதியில் விசாரணையை தங்களுக்கு மாற்றி தரும்படி கேட்டுக்கொண்டதனடிப்படையில், மேற்படி விசாரணை 17.04.2026 அன்று நடைபெறும் என இம்முறைமன்ற நடுவத்தின் 30.03.2026 நாளிட்ட அழைப்பாணை ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளருக்கும், அதன் நகல்கள் துறையூர் நகராட்சி ஆணையருக்கும், மனுதாரருக்கும் அனுப்பப்பட்டது.

12. 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளர் 17.04.2026 விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"எங்களது ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடம், துறையூரில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. துறையூர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவையின்றி செலுத்தி வருகிறேன்.

எங்களது நிறுவனத்தை தமிழ்நாடு அரசு விதிகள், நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு கட்டிடத்தை வரன்முறை செய்து கொள்ள தயாராக இருக்கிறேன்.

இது தொடர்பாக நாங்கள் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புத்துறை சட்டம், 1971, பிரிவு 80–A ன்படி தமிழக அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளேன். அதன் நகலை இன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்பித்துக் கொள்கிறேன்."

13. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், அவரது எழுத்துப்பூர்வ அறிக்கைகள், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், 2ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளரின் வாக்குமூலம், மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருச்சி மாவட்டம் துறையூரில் திருச்சி சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கட்டிடம் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளது என்றும், பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் 1 அங்குலம் கூட விடாமல் (set back) 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடிகள் கட்டப்பட்டுள்ளது என்றும், விதிமீறி கட்டப்பட்ட கட்டிடம் எனத்தெரிய வந்தால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள்

30.04.2025–ன்படி இடித்து அகற்றுமாறும், பொதுநலன் கருதி புகார் அளித்தும் துறையூர் நகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் கட்டிடத்திற்கு ஆதரவாக இருக்கும் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி கட்டிடம் சுமார் 6 ஆண்டுகளுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதும், தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா 630 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்றுள்ளதும், இரண்டாம், மூன்றாம் தளத்தில் தலா 630 சதுரடி பரப்பளவில் RCC building அமையப்பெற்ற குடோன் இயங்கி வருவதும், நான்காம் தளத்தில் 40 சதுரடி கழிவறை என கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2560 சதுரடி என்பதும், தரைத்தளம், முதல் தளத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் 2560 சதரடிக்கு 600 சதுரடி வாகனம் நிறுத்துவதற்கு என்று இடம் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதும், எனவே மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998(திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் ஸ்ரீ கோகுலம் ஜுவல்லரி உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பட்டுள்ளதும், வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதும் மேலும் கோகுலம் ஜுவல்லரி கட்டிடத்திற்கு Town and Country Planning Act, 1971, பிரிவு 80-அன் கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ள 19.02.2026 நாளிட்ட கடிதம் 28.02.2026ல் நகராட்சியில் பெறப்பட்டுள்ளதும், துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

புகாருக்குள்ளான கட்டிடத்தில் ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் கடந்த 2019–ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது என்பதும், சொத்துவரி நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், தமிழ்நாடு அரசு விதிகள், நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு தங்களது கட்டிடத்தை வரன்முறை செய்து கொள்ள தயாராக உள்ளனர் என்பதும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80–அன்படி தமிழக அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளனர் என்பதும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ் உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals.xxx xxx xxx.".

எனவே புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்துகொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–அன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாகவும், அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது குறித்து அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 06–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.அன்பழகன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் அஞ்சல் & வட்டம்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

//

2. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. திரு.வெ.குணசீலன்,
கட்டிட உரிமையாளர்,
ஸ்ரீ கோகுலம் ஜுவல்ஸ்,
துறையூர் – 621 010,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.